கண்டு பிடிக்க முடியாது. இந்த மாதிரி ஏதாவது தெரிந்த பிறகு தான் அப்பேர்ப்பட்டவர்களைத் தடுக்க முடியும்.

SRI K. ANBAZHAGAN : கனம் தலைவர் அவர்களே, இப்படிப் பட்ட மாணவர்களுடைய விடுதியில், பல ஊழல்கள் நடப்பதும், பல தவறுகள் நடப்பதும், போடுகிற சோற்றில் வஞ்சகம் செய்வது மான நிகழ்ச்சிகள் இருக்கின்றன என்பதை கனம் அமைச்சர் அவர்கள் அறிவார்களா? அதன் காரணமாகத்தான் இம்மாதிரி யான உண்ணுவிரதம் ஏற்படுகின்றது. ஆகவே, இவைகளை போக்கு வதற்கு கனம் அமைச்சர் அவர்கள் முயற்சி எடுத்திருக்கிறார்களா?

THE HON. SRI P. KAKKAN : இம்மாதிரி ஏதேனும் குறைகள் இருந்தால், டயரக்டர் அவர்களிடத்தில் சொல்லலாம். நான் இந்த ஊரில்தான் இருக்கிறேன். என்னிடம் நேரில் வந்து சொன்னால் அவைகளை கவனிப்பதற்கு நான் தயாராய் இருக்கிறேன். இவ் விதம் சொல்லி இவைகளை நிவர்த்தி செய்து கொள்வதுதான் நல்லது என்பதை கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

SRI P. G. MANICKAM : ஹாஸ்டலில் மாணவர்கள் ஏன் இப்படி செய்தார்கள் என்பதை விசாரித்து, இம்மாதிரி மற்ற ஆஸ்டல்களிலும் நடக்காதவாறு பார்த்துக்கொள்ள தக்க நட வடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : இதை நன்றாக விசாரித்துப் பார்த்ததில் ஒன்றிரண்டு மாணவர்கள்தான் இதற்குக் காரணமாய் இருந்திருக்கிறார்கள். அதில் ஒரு மாணவரின் மீது நடவடிக்கை எடுத்து, அவர் ஆஸ்டலில் தங்கியிருப்பது நல்லதல்ல என்று முடிவு செய்திருக்கிறார்கள்.

House-sites for Harijans (North Arcot district)

* 1965 *Q.*—SRI P. S. SANTHANAM : கனம் பொது மரா மத்து அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

வடாற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த திருவண்ணாமலை, செங்கம் தாலுகாக்களில் எத்தனை கிராமங்களில் ஹரிஜனங் களுக்கு வீட்டு மனைக்காக நிலம் வாங்கி தரப்பட்டிருக்கிறது?

THE HON. SRI P. KAKKAN : The number of villages in which the Harijans had been provided with house-sites, was six in Tiruvannamalai taluk and 11 in Chengam taluk during 1960–61.

SRI P. G. MANICKAM : தலைவர் அவர்களே, திருவண்ணா மலையில், மலைபாம்பாடி கிராமத்திலுள்ளவர்கள் வீட்டு மனைகளுக் காக பணம் அடைத்து ஒன்றரை ஆண்டு காலமாகியும் இதுவரை அளந்து கொடுக்கப்படாததின் காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : இதற்கு தனியாக கேள்வி போட வேண்டும்.

10th November 1961]

SRI P. U. SHANMUGAM : திருவண்ணாமலையில் எந்தெந்த கிராமங்களுக்கு வீட்டுமனை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை தெரிவிக்க வேண்டுகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : சேரியேந்தல் என்ற கிராமத்தில் ஒரு ஏக்கர் இருபது செண்ட், 11 வீட்டு மனைக்காக, வட ஆரியம் புதூர் என்ற கிராமத்தில் 2 ஏக்கர் 63 செண்ட், 30 வீட்டு மனைகளுக்காக, தலையாம்பலயம் என்ற கிராமத்தில் 3 ஏக்கர் 35 செண்ட், 35 வீட்டு மனைகளுக்காக, வெங்கிக்கால் என்ற கிராமத்தில் 3 ஏக்கர் 35 செண்ட், 35 வீட்டு மனைகளுக்காக மெகலூர் என்ற கிராமத்தில் 3 ஏக்கர் 85 செண்ட், 45 வீட்டு மனைகளுக்காக, துருவனம் என்ற கிராமத்தில் 1 ஏக்கர் 48 செண்ட், 17 வீட்டு மனைகளுக்காகவும், கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், ஹரிஜனங்களுக்கு வீட்டுமனை கொடுப்பதில் பல கிராமங்களில் இதற்கான பணம் செலுத்தி 10 வருடம் காலமாகியும் கொடுக்கப்படாத நிலைதான் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இந்த வீட்டுமனை கொடுக்கின்ற விஷயத்தில் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள், அதாவது இந்த காலத்திற்குள் நிச்சயமாக கொகுக்கப்படும் என்று நிர்ணயம் செய்ய முடியுமா ?

THE HON. SRI P. KAKKAN : இன்னின்ன காலத்திற்குள் கொடுக்க முடியும் என்று சொல்வது முடியாது. இடம் சரியாக இருக்க வேண்டும், அதைப்பற்றி விசாரிக்கும்போது இந்த இடம் ஏரியைச் சேர்ந்தது, புறம்போக்கானது என்றும், பொது ஜனங்களுக்கு உபயோகப்படக் கூடியது என்றெல்லாம் ரிப்போர்ட் வருகின்றது. இருந்தாலும் எவ்வளவு தூரம் துரிதமாக இதில் நடவடிக்கை எடுக்க முடியுமோ அவ்வளவு தூரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மூன்று மாதங்களுக்கு ஒருமுறை ரெவின்யூ போர்டிலிருந்து ரிப்போர்ட் கேட்கிறோம். கலெக்டர்கள் அவசர சட்டத்தின் மூலமாக வீட்டு மனைகளை எடுப்பதற்காக நடவடிக்கை எடுக்கிறார்கள். துரிதமாக கொடுக்க வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

Underground drainage for Tiru-Vi-Ka. Nagar

* 1966 *Q.*—SRI S. PAKKIRISAMI PILLAI : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the members of the Tiru-Vi-Ka Ilaingar Mandram, Ayanavaram, Madras, appealed to the Hon. the Minister to intervene and to order the raising and reforming of—

(1) Rangiah Naidu Street,

(2) Ramanathan Chetty Street,

(3) Palani Chetty Street,

(4) Parthasarathy Pillai Street, and

(5) Ujjinidevi Street, etc.,